# FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C

**TAMIL NADU POLICE**

INTEGRATED INVESTIGATION FORM-I

8075252

1. District மாவட்டம் : VELLORE PS: காவல்நிலையம் VIGILANCE & ANTI-CORRUPTION, VELLORE Year: ஆண்டு 2020 FIR No. மு.த.அ. எண் 15/2020 Date: நாள் 11.11.2020

2. (i) Act சட்டம்: PREVENTION OF CORRUPTION ACT 1988 as amended by the P.C. (Amendment) Act 2018 Sections பிரிவுகள்: 7 of P.C. Act 1988 as amended by the P.C. (Amendment) Act 2018

   (ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்

   Date from : நாள் முதல் 10.11.2020 Date to : நாள் வரை 11.11.2020

   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 16.30 hrs Time to : நேரம் வரை 03.30 hrs

   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 10.11.2020 Time நேரம் : 17.30 hrs

   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் VOLUME-II 10.11.2020 & 11.11.2020 Time நேரம் : 14.30 hrs.

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக TAMIL TYPED COMPLAINT

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் NORTH EAST – 60 KMs

   Beat Number : முறைக் காவல் எண்

   (b) Address : முகவரி O/O. THE DIRECT PURCHASE CENTRE TAMILNADU CIVIL SUPPLIES CORPORATION, MAHENDRAVADI VILLAGE, NEMILI TK, RANIPET DISTRICT.

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் – District மாவட்டம் : –

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் S. JOTHI

   (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் SAMPATH

   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 1965

   (d) Nationality : நாட்டினம் INDIAN

   (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

   Date of Issue : வழங்கப்பட்ட நாள்

   Place of Issue : வழங்கப்பட்ட இடம்

   (f) Occupation : தொழில் DEPUTY INSPECTION CELL OFFICER.

   (g) Address : முகவரி OFFICE OF THE DISTRICT INSPECTION CELL OFFICE, VELLORE, COLLECTORATE, VELLORE.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)

   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   Tr. CHANDRASEKAR (51/2020) S/O. UTHIRASU JUNIOR ASSISTANT / INCHARGE, DIRECT PURCHASE CENTRE (DPC) TNCSC, MAHENDRAVADI VILLAGE, NEMILI TALUK, RANIPET DISTRICT.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:

   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   – NO DELAY –

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

SEPERATE SHEET ATTACHED

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ………………….. Rank ………………….. to take up the Investigation / Refused Investigation / transferred to PS…………………………………………..on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் …………………………. பதவி ………………….. நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ………………………………………… காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் S. VIJAY
Rank: நிலை INSPECTOR OF POLICE No. எண்
VIGILANCE AND ANTI-CORRUPTION, VELLORE.

**பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது:** இன்று 11.11.2020-ஆம் தேதி 14.30 மணியளவில் வேலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் ஆகிய நான் நிலைய ஆஜரில் இருந்தபோது, திரு.S.ஜோதி, மாவட்ட ஆய்வுக்குழு துணை அலுவலர், வேலூா, இராணிப்பேட்டை, திருப்பத்தூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், வேலூர் அவர்கள் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று பார்க்க, அதன் விவரம் பின்வருமாறு: அனுப்புநர் திரு.S.ஜோதி, துணை ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், வேலூர்-9. பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, வேலூர். அய்யா, நான் வேலூர், இராணிப்பேட்டை, திருப்பத்தூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களுக்கு மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலராக உள்ளேன். நேற்று 10.11.2020-ம் தேதி மாலை சுமார் 16.30 மணியளவில், இராணிப்பேட்டை மாவட்டம், நெமிலி தாலுக்கா மகேந்திரவாடி கிராமத்தில் உள்ள தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகம், வேலூர் மண்டலம், நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் விவசாயிகளிடமிருந்து நெல் மூட்டைகளை கொள்முதல் செய்வதற்கு ஒரு மூட்டைக்கு ரூபாய்.70/- இலஞ்சமாக பணம் கட்டாய வசூல் செய்வதாக நம்பகமான தகவல் கிடைத்தது, அந்த தகவலை ஊர்ஜிதம் செய்து கொண்டு, வேலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளருக்கு மாலை சுமார் 17.30 மணிக்கு தெரியப்படுத்திய பின் 10.11.2020-ம் தேதி மாலை சுமார் 19.30 மணியளவில் நான் வேலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குழுவினருடன் இராணிப்பேட்டை மாவட்டம், நெமிலி தாலுக்கா மகேந்திரவாடி கிராமத்தில் உள்ள நேரடி நெல் கொள்முதல் நிலையத்திற்கு சென்று சேர்ந்தோம். நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் 9 நபர்கள் இருந்தனர். அவர்களிடம் இந்த நேரடி நெல் கொள்முதல் நிலையத்தின் இளநிலை உதவியாளர்/பொறுப்பாளர் திரு.சந்திரசேகரன் என்பவர் யார் என கேட்டபோது அங்கிருந்த சுமார் 50 வயது மதிக்கதக்க ஒரு நபர் தன்னுடைய பெயர் தனபால் என்றும் தான் மகேந்திரவாடி, பெரிய தெருவில் வசிப்பதாகவும், கடந்த 3 வருடங்களாக மேற்படி நேரடி நெல் கொள்முதல் நிலையம் இயங்கும்போதெல்லாம் தான் மேஸ்திரியாக பணிபுரிவதாகவும், திரு.சந்திரசேகரன் மாலை சுமார் 17.00 மணிக்கு இங்கிருந்து சென்றுவிட்டதாக கூறினார். அவரிடம் இருதுறை திடீர் கூட்டு சோதனைக்குழுவினர் தங்களை அறிமுகப்படுத்திக்கொண்டு, தங்களிடம் எந்த பணமோ, பொருளோ இல்லை என்று சுயபரிசோதனை செய்து காண்பித்தும் திரு.தனபால் என்பவரிடம் நெல் கொள்முதல் நிலையத்தின் பொருப்பாளர் திரு.சந்திரசேகரன் என்பவருக்கு உடனடியாக போன் மூலம் தொடர்பு கொண்டு உடனடியாக மகேந்திரவாடி வருமாறும் பதிவேடுகளை உடன் எடுத்துவர சொல்ல திரு.தனபால் அவர்களும், திரு.சந்திரசேகரன் அவர்களை தொடர்பு கொண்டு மேற்சொன்ன தகவலை சொன்னார். மேலும் தமிழ் நாடு நுகர்பொருள் வாணிபக்கழகம், வேலூர் மண்டல, மண்டல மேலாளர் திரு.நாகராஜன் அவர்களை தொடர்புகொண்டு மகேந்திரவாடி நேரடி நெல் கொள்முதல் நிலையத்தின் கொள்முதல் அலுவலரை உடனடியாக இங்கு வர அறிவுறுத்தும்படி போன் மூலம் தகவல் தெரவிக்கப்பட்டது. அதன்பின் திரு.தனபால் என்பவரை சோதனை செய்ய அவருடைய

சட்டை பையின் இடதுபுறம் பணம் இருந்தது, அந்த பணம் குறித்து அவரிடம் கேட்க அவர் அதற்கு 10.11.2020 அன்று மொத்தம் 877 மூட்டைகள் மகோந்திரவாடி நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் எடைபோடப்பட்டு நெல் மூட்டைகளை கொள்முதல் செய்ய திரு.சந்திரசேகரன் பொருப்பாளர் அவர்களின் உத்தரவுபடி விவசாயிகளிடம் இருந்து பெறப்பட்டதாகவும் அதில் ஒரு மூட்டைக்கு ரூபாய் 70/- வீதம் ஒவ்வொரு விவசாயிடமிருந்தும் திரு.சந்திரசேகரன் சொல்லி தான் பெற்று வைத்திருந்ததாகவும், அதில் 15 லோடுமேன்களுக்கு ஒரு மூட்டைக்கு ரூபாய் 17 வீதம் கொடுத்துவிட்டு மீதம் உள்ள பணத்தில் ரூபாய் 10,000/-தை திரு.ரவிச்சந்திரன் அவர்களிடம் நேரடி நெல் கொள்முதல் நிலையத்தின் இளநிலை உதவியாளர்/பொறுப்பாளர் திரு.சந்திரசேகரன் என்பவர் ரூபாய் 10,000/-தை கொடுக்க சொன்னதால் அவரிடம் கொடுத்துவிட்டு ரூபாய்.2,300/-ஐ தன்னுடைய பாக்கெட்டில் வைத்துக்கொண்டு மீதம் உள்ள பணத்தை மகேந்திரவாடி பெரிய தெருவில் உள்ள தன்னுடைய வீட்டில் வைத்திருப்பதாக சொன்னார். விவசாயிகளிடம் இருந்து நெல் மூட்டைகளை கொள்முதல் செய்ய லஞ்சமாக பெறப்பட்ட ரூபாய்.2,300/- வழக்கு நிமித்தம் கைப்பற்றப்பட்டது. பின்னர் திரு.ரவிச்சந்திரன், த/பெ.பெரியசாமி, கதவு எண்.66 பெரிய தெரு, மகேந்திரவாடி அவர்களை விசாரிக்க, திரு.தனபால் அவர்கள் தன்னிடம் ரூபாய் 10,000/-ஐ கொடுத்தார் என்று கூறவே அவரை சோதனை செய்து அவரின் சட்டை பாக்கெட்டில் இருந்த பணத்தை எடுத்து என்னிப்பார்க்க ரூபாய் 10,000/- இருந்தது, அந்த பணம் வழக்கு நிமித்தம் கைப்பற்றப்பட்டது. அங்கிருந்த மற்ற நபர்களை விசாரித்து அதன் விவரம் செயல்முறையில் பதிவு செய்யப்பட்டது. மேலும், இருதுறை கூட்டு சோதனை நடந்துகொண்டிருந்தபோது திரு.முருகேசன், அண்ணாநகர், மகேந்திரவாடி என்பவர் நேரில் வந்து, தான் 10.11.2020 தன்னுடைய நிலத்தில் விளைந்திருந்த 68 நெல் மூட்கைளை மகேந்திரவாடி நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் எடைபோட்டு ரூபாய் 1,320/-ஐ இங்கு வேலை செய்யும் திரு.தனபால் என்பவரிடம் கொடுத்தாக கூறி ஒரு கடிதம் ஒன்றையும் எழுதி கொடுத்தார். 10.11.2020 இரவு சுமார் 10.30 மணிக்கு திரு. A.அசோக்குமார், கண்காணிப்பாளர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகம், என்பவர் வேலூர் மண்டல மேலாளர் திரு.நாகராஜன் என்பவர் மகேந்திரவாடி நேரடி நெல் கொள்முதல் நிலையத்திற்கு மாவட்ட ஆய்வுக்குழு மற்றும் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவினர் திடீர் கூட்டு சோதனை நடத்திக்கொண்டிருப்பதாகவும் மேற்படி நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் இளநிலை உதவியாளர் /பொறுப்பாளர் திரு.சந்திரசேகரன் ஆஜரில் இல்லாததாகவும் அங்கு தினக்கூலியாக பணிபுரிபவர் மட்டும் இருப்பதாகவும் தன்னை உடனே மகேந்திரவாடி செல்லும்படி சொல்லியதால் தான் வந்திருப்பதாக கூறினார். திரு.A.அசோக்குமார் அவர்களிடம் நேரடி நெல் கொள்முதல் நிலையத்தின் பணி மற்றும் அலுவல் நேரம் குறித்து விசாரிக்க அவர் நேரடி நெல் கொள்முதல் நிலையம் காலை 09.00 மணிக்கு திறக்கப்படவேண்டும் எனவும் மாலை 06.00 மணி வரை இயங்கும் என்று கூறினார். மேலும் விவசாயிகளிடமிருந்து நெல் மூட்டைகளை பட்டா நகல், வங்கி கணக்கு புத்தக நகல் மற்றும் ஆதார் அட்டை நகல் பெற்றுக்கொண்டு அவர்களிடம் நெல்லினை கொள்முதல்

செய்யவேண்டும் என்றும் அவ்வாறு கொள்முதல் செய்யும்போது அவர்களிடமிருந்து எந்த பணமும் பெறக்கூடாது என்றும் இந்த வேலை செய்யும் மூட்டை தூக்கும் தொழிலாளர்களுக்கு தனித்தனியாக வங்கி கணக்கு ஆரம்பிக்கப்பட்டு அவர்கள் அன்று தூக்கிய மூட்டைகளுக்கு கணக்கு வைக்கப்பட்டு ஒரு டன்னுக்கு ரூபாய் 40/- வீதம் அரசால் நேரடியாக அவர்களின் வங்கி கணக்கில் செலுத்தப்படும் என்றும் மேலும் நேரடி நெல் கொள்முதல் நிலையத்தின் இளநிலை உதவியாளர் /பொறுப்பாளர் அதனுடைய பொறுப்பினை யாருக்கும் கொடுத்துவிட்டு செல்லக்கூடாது, விவசாயிகள் இங்கு வந்து நெல் மூட்டைகளை இறக்குவரை அவர்தான் பார்த்துக்கொள்ளவேண்டும் என கூறினார், மேலும் நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் ஒரு நாளுக்கு 1000 மூட்டைகள் விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யலாம் என கூறினார். மேலும் இங்கு டோக்கன் பதிவேடு, பகுப்பாய்வு பதிவேடு, இருப்பு மற்றும் நகர்வு பதிவேடு, மாதாந்திர அறிக்கை பதிவேடு, வருகை பதிவேடு, உந்துசீட்டு பதிவேடு, ஒப்புகை சீட்டு பதிவேடு ஆகியவற்றை பராமரிக்கவேண்டும் என்றும் இவர்களுக்கு ஒரு டேப்லெட் மற்றும் பிரிண்டர் ஆகியவை அலுவல் பணிக்காக வழங்கப்பட்டுள்ளது என்ற விவரங்களை கூறினார். மகேந்திரவாடி நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் இருந்த இரும்பு டேபிளின் கீழ் அலமாரியை திறந்து சோதனை செய்ய அதில் மதுபான பாட்டில்கள் மூன்று இருந்தது. மேலும் அந்த டேபிளின் மேல் டிராயரில் இரண்டு நோட்டுகள் இருந்தது. அதில் இருந்த லாங் சைஸ் நோட்டு புத்தகதத்தினை பார்வையிட 30.10.2020 முதல் 10.11.2020 வரை நெல் மூட்டைகளை யாரிடமிருந்து கொள்முதல் செய்யப்பட்டன என விவரங்கள் இருந்தது. மற்றொரு ஆப் சைஸ் நோட்டு புத்தகத்தை பார்வையிட அதன் முதல் பக்கத்தில் DPC மகேந்திரவாடி, நெமிலி வட்டம், இராணிப்பேட்டை மாவட்டம் என எழுதியிருந்தது. அதன் ஒவ்வொரு பக்கத்தையும் பார்வையிட 20.04.2020 முதல் 10.11.2020 வரை கணக்கு வழக்குள் எழுதி வைக்கப்பட்டிருந்தது. அந்த நோட்டு புத்தகத்தில் பக்கம் எண் இட்டு அதில் 43-வது பக்கத்தில் "சுப்பர்வைசர் கெடுத்த காசு என 100000, 1500" என எழுதப்பட்டிருந்தது. அதை குறித்து திரு.தனபால் அவர்களிடம் கேட்க அவர் திரு.சந்திரசேகரன் அவர்களுக்கு தினமும் விவசாயிகளிடமிருந்து ஒரு மூட்டைக்கு ரூபாய் 70/- வீதம் வசூல் செய்து செலவு போக கொடுத்த பணம் என சொன்னார். அந்த நோட்டு புத்தகம் வழக்கு நிமித்தம் கைப்பற்றப்பட்டது. அந்த சமுதாய கூடத்தின் கிழக்குபுறம் அந்த கட்டிடத்தை ஒட்டியே தகர சீட்டால் ஆன ஷெட் ஒன்று போடப்பட்டு அந்த ஷெட்டில் 1,308 நெல் மூட்டைகள் அடிக்கி வைக்கப்பட்டு இருந்தது. 10.11.2020 இரவு சுமார் 23.35 மணிக்கு R.முரளிதரன், உதவி மேலாளர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் அவர்கள் வேலூர் மண்டல மேலாளர் திரு.நாகராஜன் அவர்களின் உத்தரவுபடி மகேந்திரவாடி நேரடி நெல் கொள்முதல் நிலைய பொருப்பாளர்/ இளநிலை உதவியாளர் திரு.சந்திரசேகர் அவர்களுடன் வந்து அறிக்கை செய்தார், திரு.சந்திரசேகரன், இளநிலை உதவியாளர்/பொருப்பாளர், நேரடி நெல் கொள்முதல் நிலையம், மகேந்திரவாடி அவர்களிடம் இரும்பு டேபிளில் இருந்து கைப்பற்றப்பட்ட ஆப் சைஸ் நோட்டு புத்தகம் குறித்து விசாரிக்க அவர் மேற்படி நோட்டு புத்தகத்தை தான் பராமரிப்பதில்லை எனவும் அது மேஸ்திரி தனபால் என்பவர் பராமரித்துவரும் நோட்டு

புத்தகம் என்று அதில் 43-வது பக்கத்தில் உள்ள பதிவுகள் குறித்து கேட்க தான் தனபால் என்பவரிடமிருந்து கடந்த ஒரு வாரத்தில் ருபாய் 1,01,500/- பெற்றதாகவும் அந்த தொகையிலிருந்து தான் ஏற்கனவே மயிலாடுதுறையில் அமன் ஜீவல்லரி என்ற கடையில் அடகு வைத்திருந்த நகையை சுமார் 40,000/- கொடுத்து 08.11.2020 அன்று மீட்டு விட்டதாகவும், சுமார் 15,500/- மதிப்புள்ள Oppo Mobile, வேலூர் பூர்விக மொபைல்ஸில் வாங்கிவிட்டதாகவும் மீதி தொகையை செலவு செய்துவிட்டதாகவும் கூறினார். மேலும் அவர் அலுவலக சம்மந்தப்பட்ட பதிவேடுகளையும் ஆஜர் செய்தார், அவர் ஆஜர் செய்த ஆவணங்ள், பதிவேடுகளை பார்வை செய்து அதன் விவரங்கள் குறித்து திடீர் சோதனை குறித்த செயல்முறையில் தெளிவாக பதிவு செய்யப்பட்டது. அதனை தொடர்ந்து மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் மற்றும் திரு.முரளிதரன், உதவி மேலாளர் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகம், வேலூர் மண்டலம் ஆகியோர் உதவியுடன் நெல் கொள்முதல் இருப்பு சரிபார்க்க 1385 மூட்டைகள் இருந்தது. மேற்படி இருதுறை திடீர் கூட்டு சோதனையின்போது விவசாயிகளிடமிருந்து அரசு நேரடி நெல் கொள்முதல் செய்த மூட்டைகளுக்கு அரசிடமிருந்து பணம் பெற்றுதா ஒவ்வொரு விவசாயிடமிருந்தும் இலஞ்சமாக பெற்று திரு.தனபால் அவர்கள் வைத்திருந்த பணத்தை எடுத்துவர அனுமதித்ததின்பேரில் திரு.தனபால் அவர்கள் உதவி மேலாளர் திரு.R.முரளிதரன் அவர்களுடன் சென்று மீண்டும் வந்து கத்தையாக பணத்தை 10.11.2020 அன்று விவசாயிகளிடமிருந்து நெல் மூட்டைகளை கொள்முதல் செய்வதற்கு திரு.சந்திரசேகரன் அவர்கள் இலஞ்சமாக பெற்று செலவு போக தன்னிடம் கொடுத்துவைத்திருந்த தொகை என கூறி ஆஜர் செய்தார், அதனை என்னிப்பார்க்க ரூபாய்.37,000/-ஐ இருந்தது, வழக்கு நிமித்தம் மேற்படி தொகை கைப்பற்றப்பட்டது. இந்த திடீர் சோதனையில் விவசாயிகளிடமிருந்து இலஞ்சமாக பெற்ற மற்றும் தக்க முகாந்திரம் கூற இயலாத தொகை மொத்தம் ரூபாய் 49,300/- வழக்கு நிமித்தம் கைப்பற்றப்பட்டது. திடீர் சோதனை குறித்த விவரங்கள் அனைத்தும் விரிவாக பதிவு செய்யப்பட்ட செயல்முறை 11.11.2020 சுமார் 03.30 மணிக்கு முடிக்கப்பட்டது. திரு.சந்திரசேகரன், இளநிலை உதவியாளர்/பொருப்பாளர், நேரடி நெல் கொள்முதல் நிலையம், மகேந்திரவாடி அவர்கள், விவசாயிகளிடம் இருந்து நெல் மூட்டைகளை கொள்முதல் செய்ய லஞ்சமாக கட்டாய பண வசூல் செய்தும், ஆவணங்களில் உள்ள நெல் மூட்டைகளை விட அதிக அளவில் நெல்மூட்டைகள இருப்பில் வைத்து முறைகேடு செய்தும், அலுவலக ஆவணங்களை முறையாக பராமரிக்காமல் ஒழுங்கற்ற முன்னுக்குபின் உள்ள விவரங்களை ஆவணங்கள் மற்றும் பதிவேடுகளில் எழுதியும் முறையற்ற வகையில் தன்னுடைய பதவியை அதிகார துஷ்பிரயோகம் செய்து லஞ்சமாக பணம் வசூல் செய்த மகேந்திரவாடி நேரடி நெல் கொள்முதல் நிலைய பொருப்பாளர்/இளநிலை உதவியாளர் திரு.சந்திரசேகரன் மீது ஊழல் தடுப்பு சட்டத்தின்கீழ் வழக்கு பதிவு செய்து தக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். மேலும், திடீர் சோதனையில் கைப்பற்றப்பட்ட லஞ்சமாக விவசாயிகளிடம் இருந்து வசூல் செய்யப்பட்ட பணம் மற்றும் உரிய கணக்கு கூற இயலாத பணம் ஆக மொத்தம் ரூ.49,300/-, கைப்பற்றப்பட்ட பதிவேடுகள், ஆவணங்கள்,

பதிவுசெய்த வாக்குமூலங்கள் மற்றும் இருதுறை திடீர் சோதனை குறித்த அசல் செயல்முறை ஆகியவற்றை தக்க நடவடிக்கைக்காக ஒப்படைக்கிறேன். ஒம்/- xxxxxxxxxxx (S.ஜோதி), 11.11.2020 துணை ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், வேலூர்.

Sir,

Received the complaint and registered a case in V&AC, Vellore Detachment Cr.No.15/2020, U/s. 7 of the Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 on 11.11.2020 @ 14.30 Hrs. The FIR in original along with the complaint, Joint Surprise check proceedings in original sent to Hon'ble CJM and Special Judge, Vellore and sent the copies to the officers concerned. Sd/- xxxxxxxxxxx (S.VIJAY) 11.11.2020, Ins/VAC/Vellore.

11/11/2020
(S.VIJAY)
Ins/V&A.C/VLR